1973 மார்ச் 29]

வகையில், கழிவு நீரைக் கொண்டு செல்லும் அளவிற்கும் தங்கு தடையில்லாமல் கொண்டு செல்ல திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது. படிப் படியாக நிறைவேற்றப்படும்.

திரு. த. சோனையா : மதுரையில் தாழ்வான பகுதிகளில் மழைத் தண்ணீர் தேங்கி இருப்பதை அகற்ற திட்டமிடுகிறார்கள். அதில் திடீர் நகர் காமராஜபுரம் போன்றவை சேர்க்கப்பட்டுள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அந்தப் பகுதி சேர்க்கப்பட்டிருக்கிறதா இல்லையா என்பதைப் பற்றிய விவரக் குறிப்பு இல்லை. தனிக் கேள்வி போட்டால் விவரம் அறிந்து சொல்லலாம். 115 லட்சம் ரூபாய் திட்டம் ஒன்று தீட்டப்பட்டு பரிசிலனையில் இருந்து வருகிறது. படிப்படியாக நிறைவேற்ற முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

*Bus route roads in Nagapattinam*

* 555 Q.—THIRU A. RAJAMANICKAM : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state whether there is any proposal to take over the bus route roads at present maintained by the Nagapattinam Municipality by the Government? மு.ப 9-30

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நகரங்களின் எல்லைக்குள் இருக்கும் பேருந்துகள் செல்லும் சாலைகளை நெடுஞ் சாலைத் துறையின் பொறுப்புக்கு மாற்றுவதென அரசு தீர்மானித் திருக்கிறது.

*Poison Information and Treatment Centre at Madras.*

* 556 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether there are proposals under the consideration of the Government to open a Poison Information and Treatment Centre at the Madras General Hospital; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) & (இ) : ஆம். இத்தகைய நிலையம் ஒன்று சென்னை பொது மருத்துவமனையில் ஏற்படுத்துதல் பற்றிய செயற் குறிப்பொன்று மருத்துவக் கல்வி இயக்குநர் அரசுக்கு அனுப்பியுள்ளார். அது அரசின் பரிசீலனையில் உள்ளது.